**காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்திட்டம் (CRIWMP) - 2024**

---

காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ (CRIWMP) செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு பசுமை காலநிலை நிதியத்திற்கும் (GCF) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் (UNDP) இடையில் கைச்சாத்திட்ட 2016 ஆகஸ்ட் 05 ஆம் திகதிய அங்கீகார பிரதான உடன்படிக்கையின் 17.01 (ஆ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், நீர்ப்பாசன அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கமநல அபிவிருத்தி திணைக்களம், விவசாயத் திணைக்களம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு என்பன அமுலாக்கல் முகவர்களாக உள்ளன.

காலநிலை மாற்ற இடர் மற்றும் தாக்கங்களுக்கு எதிராக உணவுப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை பாதுகாப்பதற்கு நீர் முகாமைத்துவத்திற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை ஊடாக உலர் வலயத்தில் உள்ள சிறு விவசாயிகளின் குறிப்பாக பெண்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கையை மேம்படுத்துதலும் எதிர்கொள்ளும் தன்மையை அதிகரிப்பதற்கு இலங்கை அரசாங்கத்தின் (GOSL’s) தொலைநோக்கிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். உலர் வலயத்தின் மூன்று ஆற்றுப்படுக்கைகளில் கிராமிய நீர்ப்பாசன முறைமையை தரமுயர்த்தி மேம்படுத்துதல் மற்றும் காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் விவசாய நடைமுறைகளினை அளவிடுதல், காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்வதை மேம்படுத்துதல், பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு ஆண்டு முழுவதும் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு நீர் வழங்கல் மற்றும் முகாமைத்துவ தீர்வுகளை பரவலாக்குதல், நீர் முகாமைத்துவம் மற்றும் சிறு விவசாயிகளின் வறட்சி மற்றும் வெள்ளம் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகியவற்றிற்கு நீர் முகாமைத்துவம் மற்றும் சிறு விவசாயிகளின் தகவலமைப்பு திறனை மேம்படுத்துவதற்கு காலநிலை மற்றும் நீரியல் கண்காணிப்பு மற்றும் முன்னறிவிப்பு முறையை வலுப்படுத்துதல் ஆகிய நான்கு அலகுகளின் கீழ் செயற்திட்டத்தின் பணிகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,521.45 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 52.084 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 5,499.71 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 38.084 மில்லியன் பசுமை காலநிலை நிதியத்தால் (GCF) நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. இலங்கை அரசாங்கத்தினால் ரூபா 2,021.74 மில்லியன் மிகுதி தொகை நிதியிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூலை மாதத்தில் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்திசெய்தல் திகதி 2025 திசெம்பர் 28 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டது.

## 1.3 மறுப்பு அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. ஓர் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

**2.	நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1	கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்கீட்டு குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பசுமை காலநிலை நிதியமானது ஒட்டுமொத்த கூட்டு மொத்தம் ரூபா 9,172 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 38.084 மில்லியனை ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு (UNDP) வழங்கியிருந்தது. எனினும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,745.93 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 18.85 மில்லியன் மாத்திரம் செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் செயற்திட்டத்தின் சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு UNDP இனால் ரூபா 3,444.05 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 15.75 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், ரூபா 1,019.64 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 3.48 மில்லியன் மிகுதி நிதி UNDP ஆல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மொத்த பணவளிப்பின் 50 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றவை PMU விற்கு வழங்கப்பட்ட தொகைக்கு மாத்திரமே நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததால் முழு செயற்திட்டத்தின் நிதி செயலாற்றல் மற்றும் நிதி நிலைமை என்பவற்றை பிரதிபலிக்காததுடன் கணக்காய்வு பணி PMU ஆல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளிற்கு மட்டுப்படுத்தப்பட்டது. | 1,019.64 | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்பட்டு ஏற்றுக்கொள்கின்றோம். குறிப்பிட்டுள்ளபடி, மொத்த பங்களிப்பில் 49 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்ட நிதிகளிற்கு மாத்திரமே செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களானது தயாரிக்கப்பட்டுள்ளது. UNDP இனால் நேரடியாக செய்யப்பட்ட செலவினங்கள், அதேபோல் நிறுத்தி வைக்கப்பட்ட மீதி என்பன இக் கூற்றுக்களில் பிரதியலிக்கவில்லை. | நன்கொடை முகவரால் வழங்கப்படும் நிதி மத்திய வங்கியின் ஊடாக அனுப்பப்பட்டு செயற்திட்டத்தின் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | ஒப்படைப்புக் கட்டணங்கள் ரூபா 20.89 மில்லியனானது நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, செயற்திட்ட | 20.89 | ஒப்படைப்பு கட்டணம் மற்றும் குறை முற்பணங்கள் என்பன செயற்திட்ட கணக்குகளில் பிரதிபலிக்கவில்லை, இதன் | ஒப்படைப்புக் கட்டணங்களை கணக்கீடு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலவானது அத் தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | விளைவாக குறிப்பிடத்தக்களவு பொருத்தமின்மை ஏற்பட்டது. | வேண்டும். |
| (இ) | ரூபா 352.52 மில்லியன் தொகையான கடன் மீதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. அதன் பெறுபேறாக, பொறுப்புக்கள் அத் தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 352.52 | இத் தொகையினை இணக்கம் செய்யும் ஓர் விபரமான பட்டியளினை நாங்கள் தயாரித்து இணைத்துள்ளதுடன் இது ஒட்டு மொத்த செயற்திட்ட பெறுமதிக்குள் இது எவ்வாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதனை காட்டுகின்றது. இத் தொகையானது ஓர் விடுபாடு அல்ல, ஆனால் ஒட்டுமொத்த செயற்திட்ட நிதியளிப்பில் ஓர் பகுதியாகும், மேலும் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மொத்த செயற்திட்ட பெறுமதியுடன் அதன் சீரமைப்பை நிறுபிக்கின்றது. இக் கணக்கிணக்கமானது ஒட்டு மொத்த நிதியின் அறிக்கையிடலிலுள்ள நிலையான தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்கின்றது. | நிதிக்கூற்றுக்களில் அனைத்து கொடுக்கல்வாங்கல் களையும் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | FAA (நிதியிடப்பட்ட செயற்பாட்டு உடன்படிக்கை) இன் 2.01 ஆம் உட்பிரிவு | அங்கீகாரம் பெற்ற நிறுவனம் (UNDP) "நிறைவேற்றும் நிறுவனத்தால் நிதியிடப்பட்ட செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதை கண்காணித்து மேற்பார்வையிடும்." அந்த உட்பிரிவை கருத்தில் கொள்ளாமல், அங்கீகாரம் பெற்ற நிறுவனம் (UNDP) செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுல்ப்படுத்தலில் ரூபா 3,444.12 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 15.75 மில்லியன் தொகையான மொத்த கிரயத்தில் 44.7 சதவீதத்தை 2017-2024 காலப்பகுதியில் செலவிட்டிருந்தது. | செயற்திட்ட செயற்பாடுகளானது நீர்ப்பாசன அமைச்சு மற்றும் நிதி அமைச்சு என்பவற்றுடன் கைச்சாத்திடப்பட்ட தொடர்புடைய உடன்படிக்கைகளின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்டதாக UNDP தெரிவித்திருந்தது. இருப்பினும், அவ்வாறான மாற்றங்களினைச் செய்வதற்கு உடன்படிக்கைகளில் எவ்வித அதிகாரமும் இல்லாத போதிலும், | செயற்திட்ட நடவடிக்கைகள் நிறைவேற்றும் நிறுவனத்தால் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். மேலும் FAA இன் பிரகாரம் அங்கீகாரம் பெற்ற முகவரால் கண்காணிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 2020 ஆம் ஆண்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட பணவளிப்புச் செயன்முறையானது அரசாங்கம், அமைச்சரவை, அல்லது GCF இன் அனுமதியை பெற்றுக் கொள்ளாமல் மாற்றம் செய்யப்பட்டிருந்தமை யை செயற்திட்ட அணி மற்றும் கணக்காய்வாளர்கள் கண்டறிந்திருந்தனர். | |
| (ஆ) | FAA இன் நிதியளிப்பு முன்மொழிவின் ஆ பிரிவு | பசுமை காலநிலை நிதியத்திலிருந்து ரூபா 4,745.93 மில்லியன் மற்றும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து ரூபா 2,818.87 மில்லியன் 2024 ஆம் ஆண்டு இறுதி வரை செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுக்கு பெறப்பட்டிருந்தது. FAA இன் நிதியளிப்பு முன்மொழிவின் ஆ பிரிவின் பிரகாரம், இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு 27 சதவீதமாகவும், பசுமை காலநிலை நிதியத்தின் பங்களிப்பு செயற்திட்டத்தின் மொத்த பாதீட்டில் 73 சதவீதமாகவும் உள்ளது. செயற்திட்டத்திற்காக பசுமை காலநிலை நிதியத்திடமிருந்து ரூபா 4,745.93 மில்லியன் பெறப்பட்டிருந்த போதிலும் அது மொத்த செயற்திட்ட கிரயத்தில் 62.74 சதவீதம் மாத்திரமே ஆகும். இதன் விளைவாக இலங்கை அரசாங்கம் 2017-2024 காலப்பகுதியில் செயற்திட்டக் கிரயத்தில் 37.26 சதவீதத்திற்கு சமமான ரூபா 2,818.87 மில்லியனை செலவிட்டிருந்தது. | PMU வின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட இவ் விடயமானது முன்னரே கலந்துரையாடப்பட்டுள்ளது, மேலும் GCF நிதிகளினை முழுமையாகவும் சரியான நேரத்திலும் மாற்றம் செய்வதனை உறுதி செய்ய UNDP மற்றும் உரிய அதிகாரிகளுடன் ஈடுபட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதியளிப்பு முன்மொழிவின் நிபந்தனைகளின் பிரகாரம் PMU இற்கு பெறப்பட்ட தொகையின் அடிப்படையில் அரசாங்க பங்களிப்பு விடுவிக்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான செலவின மதிப்பீடுகளின் ஆவணத்தில், 21 செயற்பாடுகளின் நிதிச் செயலாற்றல் பூச்சியமாக பதிவிடப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் நாங்கள் உடன்படுகின்றோம். | செயற்திட்டமானது திட்டமிட்டபடி செயற்திட்டத்தின் செயற்பாடுகளை அமுல்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மன்னார் மாவட்ட கீழ்நிலை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், சின்னப்புச்சிக்குளம் நீர்ப்பசனத்திற்குச் சொந்தமான 7 குளங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 25.2 மில்லியன் ( ஒரு குளத்திற்கு 3.6 மில்லியன் விகிதம்) கமநல அபிவிருத்தித் திணைக்களம் - மன்னார் இற்கு 2023 நவம்பர் 29 இல் விடுவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இந் நிதியானது 7 குளங்களின் அபிவிருத்திக்காக எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக கமநல அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து எவ்வித சாராம்ச மதிப்பீடு அல்லது பணிப்புரையோ கிடைக்கவில்லை, மேலும் 2025 சனவாரி 15 இல் உள்ளவாறு, இந் நிதிகளின் செலவினங்கள் தொடர்பாக எவ்வித நிதி அல்லது பௌதீக செயலாற்றலும் செயற்திட்டத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | இத் தாமதமானது தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் இல்லாததன் காரணத்தினாலாகும். தற்போது வேளைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | விடுவிக்கப்பட்ட நிதிகள் உரிய வேளைக்கு வினைத்திறனாக பயன்படுத்தப்படுவதனை சரிபார்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | வெவகம் புபுதுவ செயற்திட்டத்தின் கீழ் கிராமிய நீர்ப்பாசன முறைமையினை (VIS) புனரமைப்பதற்கான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை சேவைக்காக 2023 நவம்பர் முதல் MCB ஆனது ஓர் விசேட நிபுனரின் சேவையை ஈடுபடுத்தியுள்ளது. 2023 நவம்பர் தொடக்கம் 2024 ஒக்டோபர் வரை இவ் விசேட நிபுனரின் சேவைக்காக MCB இற்கு செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 11.39 மில்லியனாகும், மேலும் இதற்காக, உச்சபட்ச சேவைக் கட்டணத்தில் 1.5% இனை மிஞ்சி சேவைக் கட்டணத்தில் 16.5% MCB இற்கு செலுத்தப்பட்டுள்ளது. 2023 நவம்பர் முதல் சேவைக் கட்டணங்களாக செலுத்தப்பட்ட மொத்த பெறுமதி ரூபா 1.37 மில்லியன் (16.5%) ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதேபோல் 2021 ஜூன் 25 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இல. 21/0967/314/026 இற்கு முரணாக அப் பெறுமதியில் ரூபா 1.24 மில்லியன் (15%) ஆன ஓர் தொகை தொடர்புடைய நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | MCB இனால் சமர்ப்பிக்கப்பட்ட செலவு விபரணக்குறிப்புக்களின் அடிப்படையில் செயற்திட்ட பெறுகைக் குழுவின் சிபாரிசின் போரில் மகாவலி ஆலோசனை பணியகத்தினூடாக ஓர் தொழிநுட்ப நிபுனரின் சேவைகள் பெறப்பட்டன. அதன்படி, ஒப்பந்த விண்ணப்பதாரர் MCB ஆகும், மேலும் செய்யப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளும் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த விதிமுறைகளின் அடிப்படையில் அவர்கள் ஊடாக வழங்கப்படும் சேவைகளுக்காகவே செய்யப்பட்டன. | செயற்திட்டமானது அமைச்சரவை அனுமதித்த கட்டண வரையரைகளை பின்பற்ற வேண்டும். |

## 3.2 களவிஜயங்களின் போது அவதானிக்கப்பட்டவைகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்டமானது, காலநிலை மற்றும் விவசாய ஆலோசனை சேவைகளைப் பரப்புவதில் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு பங்களிப்புச் செய்வதற்காக ஏழு மாவட்டங்களினுள்ள கமநல சேவை நிலையங்களை அறிவு மையங்களாக பலப்படுத்தும் நோக்கத்தின் கீழ் 46 கமநல சேவை நிலையங்களிற்கு 65 அங்குல LED தொலைக்காட்சி திரைகளினை வழங்குவதற்காக ரூபா 13.72 மில்லியனை செலவிட்டிருந்தது. இத் திரைகளினை பெற்றுக் கொண்ட ஆறு நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட கள பரீட்சிப்பின் போது, இரண்டு நிலையங்கள் (மரடான்கடவெல மற்றும் மிஹின்தலை) மாத்திரமே அவைகளை விவசாய ஆலோசனை விரிவாக்கல் சேவைக்காக பயன்படுத்தியிருந்த அதே நேரம் ஏனையவர்கள் உபகரணங்களை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தியிருக்கவில்லை. மேலும், கணக்காய்வுத் திகதியான 2025 ஜூலை 24 ஆம் திகதிவரை கூட தேவையன முறைமை உருவாக்கப்பட்டிராததனால், காலநிலை ஆலோசனை சேவைகளை ஒளிபரப்புவதற்கான ஓர் டிஜிடல் வலையமைப்பு முறைமையினை நிறுவுவதற்கான பிரதான நோக்கமானது அடையப்பட்டிருக்கவில்லை, அதன் பெறுபேராக வளங்கள் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் முதன்மை செயற்திட்ட நோக்கத்தினையும் அடையத் தவரியிருந்தது. | கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிபுனத்துவ பதவியானது ஓர் முக்கிய செயற்திட்ட பங்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், சம்பள நிலை தொடர்பன அதிருப்தி தொடர்பாக பலமுறை இராஜினாமா செய்ததன் காரணமாக தொடர்ச்சியான சவால்களை எதிர் கொண்டோம். | குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் உரிய நோக்கங்கள் அடையப்பட்டதனை செயற்திட்டமானது உறுதி செய்ய வேண்டும். |

## 3.3 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| இறுதி கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கை வருடாந்தம் பசுமை காலநிலை நிதியத்திற்கு (GCF) சமர்ப்பிக்கப்படவில்லை. | உங்கள் விடயத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நாங்கள் தெரிவித்துள்ளோம், மேலும் CGF இற்கு சரியான நேரத்திற்கு சமர்ப்பிப்பதனை உறுதி செய்ய அவர்களுடன் தொடர்ந்தும் நெருக்கமாக ஒருங்கிணைந்திருப்போம். | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களானது CGF இற்கு முறையாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |